# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் இலக்கணச் சுருக்கம் – ஓர் அறிமுகம்

திரு.பொ. செங்கதிர்ச்செல்வன்

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழிலே பழந்தமிழிலக்கண நூல்கள் பல கிடைக்கின்றன. அவற்றுட் பலவற்றின் மொழிநடை பிற்காலத்தவர்களுக்குக் கடினமாக அமைகின்றது. அந்த வகையிலே தொல்காப்பியம், நன்னூல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு தமது காலத்துக்கு வேண்டிய புதிய விடயங்களைச் சேர்த்தும் தேவைபற்ற விடயங்களை நீக்கியும் எளிமையான மொழிநடையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய இலக்கணச் சுருக்கத்திலுள்ள புதுமையான விடயங்களை அறிமுகப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

ஈழத்திலே பல இலக்கண நூல்கள் எழுந்துள்ளன. இவை பெரும்பாலும் பழந்தமிழிலக்கண நூல்களைச் சார்ந்து புதிதாக இயற்றப்பட்டவையாக உள்ளன. இருப்பினும் இந்த நூல்கள் முற்று முழுதாகப் பழந்தமிழிலக்கண நூல்களைச் சார்ந்து தான் இயற்றப்பட்டன என்றும் கூறிவிட முடியாது. அவற்றிற் கூறப்படாத பல புதிய விடயங்களையும் சேர்த்துக் கூறுகின்றன. இவற்றுட் சில இன்று எமக்குக் கிடைப்பதில்லை. ஆறுமுக நாவலரின் **இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை** சி.வை.தாமோதரம்பிள்ளையின் **கட்டளைக்கலித்துறை** அ.குமாரசாமிப் புலவரின் **இலக்கண சந்திரிகை, வினைப் பகுபத விளக்கம்** மு.சிதம்பரப்பிள்ளையின் **தமிழ்வியாகரணம்** க.பெ.சௌந்தரநாயகத்தின் **நன்னூற் சுருக்கம், நன்னூற் சுருக்கச் சார்பு, நன்னூற் சுருக்க அனுபந்தம்** ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின் **நன்னூல் இலகு போதம், நன்னூல் உதாரண விளக்கம், Civilian's Tamil Grammar** நீர்வேலிச் சிவப்பிரகாச பண்டிதரின் **இயற்றமிழ் இலக்கண சாரம் வாக்கிய நிரூபணம்,** சேர்.பொன் இராமநாதனின் **செந்தமிழ் இலக்கணம்** உடுவில் ச. ஜகநாதையரின் **பாட்டியல் வினாவிடை** என்பன இவ்வகையுள் அடங்குகின்றன. இவற்றுள் முதலில் எழுந்ததும் ஏனைய வசன இலக்கண நூல்களுக்கு வழிகாட்டியாக அமைந்ததும் அன்றிலிருந்து பலராலும் பயிலப்பட்டு வருகின்றதுமாகிய இலக்கணச் சுருக்கமே தலை சிறந்த நூலாகக் கொள்ளப்பட்டு வருகின்றது.

நாவலர் தமது 51 ஆவது வயதில் **இலக்கணச் சுருக்கத்தை** எழுதினார் என்று கனகரத்தின உபாத்தியாயர் **ஆறுமுகநாவலர் சரித்திரம்,** பக்கம் 109 இல் எழுதியுள்ளார். அவ்வாறாயின் **இலக்கணச் சுருக்கம்** இயற்றப்பட்ட ஆண்டு 1873 ஆக இருக்க வேண்டும். நாம் ,இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட **இலக்கணச் சுருக்கம்** ச. பொன்னுஸ்வாமி என்பவராற் சென்னை வித்தியாநுபாலன அச்சகத்தில் அச்சிடப்பட்டது. 23ஆம் பதிப்பு, வெளிவந்த ஆண்டு மே, 1957. முதற்பதிப்பிலிருந்து இன்றுவரை **இலக்கணச் சுருக்கம்** பல பதிப்புக்களைக் கண்டுவிட்டது. 1993 இல் சென்னை, முல்லை நிலையத்தார் ஆறுமுக நாவலரவர்கள் – **தமிழ் இலக்கணம் (இலக்கணச் சுருக்கம்)** என்ற பெயரில் நாவலரது **இலக்கணச் சுருக்கத்தை** வெளியிட்டுள்ளனர். அதன் பதிப்புரையில் '**இலக்கணச் சுருக்கம்** என்னும் தலைப்பில்

கி.பி. 1886 ஆம் ஆண்டில் யாத்து வெளியிட்ட நூல்....'' என்று கூறிச் செல்கின்றனர். இந்தத் தகவல் தவறாகவே இருக்க வேண்டும். எனவே கனகரத்தின உபாத்தியாயரின் கருத்துப்படி இதன் காலத்தை 1873 என வரையறை செய்து கொள்வோம்.

" தமிழ் கற்கப்புகுஞ் சைவசமயிகள் முன்னர்ப் பால பாடங்களைப் படித்துக் கொண்டு, இலக்கணச் சுருக்கத்தைக் கற்றறிந்து பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக.'' என்பது நாவலரின் கூற்று. தமிழ் நாட்டறிஞர்களிடமும் ஓரளவு இந்நோக்கிருந் ததனை விசாகப்பெருமாளையரின் 'பாலபோத இலக்கணம்' 'இலக்கணச் சுருக்க வினாவிடை' என்பவற்றின் முகவுரைகளினால் அறியலாம் என்று திருமதி.க.சின்னையா[1] (1979) குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் எழுந்துள்ள புதிய இலக்கண நூல்களின் வரிசையிற் சிறப்பிடம் பெறுகின்ற நாவலரின் **இலக்கணச் சுருக்கம்**, எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், தொடர் மொழியதிகாரம் என்ற முப்பிரிவில் இலக்கண விதிகளை உதாரணங்களுடன் இலகுவான நடையில் விளக்குவதாக அமைந்துள்ளது. பரீஷை வினாக்களும் ஒவ்வொரு இலக்கணப் பிரிவுகளுக்கும் பின்னர் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு இலகுவான முறையில் எழுதப்பட்ட வசன இலக்கண நூலாக இது விளங்கினும் மிகத் தெளிவான இலக்கண விளக்கங்கள் பல இலக்கணச் சுருக்கத்திற் காணப்படுகின்றன.

**இலக்கணச் சுருக்கம்** எழுதிய நாவலர் அதற்கு முன்னுரை எழுதவில்லை. சூசீபத்திரம் என்ற தலைப்பிற் பின்வரும் விடயங்களைத் தருகின்றார்.

**எழுத்ததிகாரம்**
எழுத்தியல்
பதவியல்
புணரியல்

**சொல்லதிகாரம்**
பெயரியல்
வினையியல்
இடையியல்
உயிரியல்

**தொடர்மொழியதிகாரம்**
தொகைநிலைத் தொடரியல்
தொகா நிலைத் தொடரியல்
ஒழிபியல்

பகுபத முடிவு
சொல்லிலக்கணங் கூறுதல்
சொற்றொடரிலக்கணங் கூறுதல்[2]

நாவலர் கூறுகின்ற தொடர் மொழியதி காரம் என ஒன்றைத் **தொல்காப்பியமோ** அன்றி **நன்னூலோ** வகுத்திருக்கவில்லை. அவை சொல்லிலக்கணத்தினுள்ளேயே தொடரிலக்கணத்தையும் கூறிவிட்டன. தொடர்மொழியதிகாரம் ஆறுமுகநாவலராலேயே புதிதாகச் செய்யப்பட்டுள்ளது. பழந்தமிழ் இலக்கண நூல்களிலே தெளிவாக விளக்கப்படாத சில விடயங்களைத் தெளிவாக விளக்கி **இலக்கணச் சுருக்கத்திற்** கூறிய சிறப்பு நாவலருக்குண்டு.

குற்றியலுகரம் என்பதற்கு நாவலர் கூறுகின்ற விளக்கம் நோக்கத்தக்கது.

"குற்றியலுகரமாவது, தனிக் குற்றெழுத்தல்லாத மற்றையெழுத்துக்களுக்குப் பின்னே மொழிகளினிறுதியில் வல்லின மெய்களில் ஏறிநிற்கும் உகரமாம்.

அக்குற்றியலுகரம், ஈற்றெழுத்தாகிய தன்னைத் தொடர்கின்ற அயலெழுத்தின் வகையினாலே, நெடிற்றொடர்க் குற்றியலுகரம், ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் உயிர்த் தொடர்க் குற்றியலுகரம், வன்றொடர்க் குற்றியலுகரம் மென்றொடர்க் குற்றியலுகரம், இடைத்தொடர்க் குற்றியலுகரம் என ஆறுவகைப்படும். அவைகளுள் நெடிற்றொடர் மாத்திரம் இரண்டெழுத்து மொழியாகியும் மற்றையைந்து தொடரும் மூன்றெழுத்து முதலிய பலவெழுத்து மொழியாகியும் வரும்.

உ - ம் : நாடு ஆடு – நெடிற்றொடர்க் குற்றியலுகரம்
எஃகு கஃசு – ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்
வரகு பலாசு – உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்
கொக்கு கச்சு – வன்றொடர்க் குற்றியலுகரம்
சங்கு வண்டு – மென்றொடர்க் குற்றியலுகரம்
அல்கு எய்து – இடைத்தொடர்க் குற்றியலுகரம்.[3]

இத்தகைய தெளிவான விளக்கம் **இலக்கணச் சுருக்கத்திற்கு** முன் வந்த பழந்தமிழ் இலக்கண நூல்களில் இல்லை எனலாம்.

புணர்ச்சி பற்றிய புணரியலில் 53 பக்கங்களில் விரிவாக விளக்கிச் செல்கின்றார்.

புணர்ச்சியாவது : நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப் புணர்வதாம். அப்புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சியும் அல்வழிப் புணர்ச்சியும் என இரண்டு வகைப்படும்.

வேற்றுமைப் புணர்ச்சியாவது: ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறுருபுகளும் இடையில் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரச் சொற்கள் புணர்வதாம்.....

அல்வழிப் புணர்ச்சியாவது: வேற்றுமையல்லாத வழியிற் புணர்வதாம். அது வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித்தொகை என்னும் ஐந்து தொகைநிலைத் தொடரும் எழுவாய்த்தொடர், விளித்தொடர், தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குச் சொற்றொடர் என்னும் ஒன்பது தொகாநிலைத் தொடருமாகப் பதினான்கு வகைப்படும்..........

இப்படி மொழிகள், வேற்றுமை வழியாலும் அல்வழியாலும் புணருமிடத்து இயல்பாக வாயினும் விகாரமாகவாயினும் புணரும். இயல்புப் புணர்ச்சியாவது: நிலை மொழியும், வருமொழியும் விகாரமின்றிப் புணர்வதாம். விகாரப் புணர்ச்சியாவது: நிலைமொழியேனும், வருமொழியேனும், இவ்விரு மொழியுமேனும், தோன்றல், திரிதல் கெடுதல் என்னும் மூன்று விகாரங்களுள் ஒன்றேயாயினும் பலவற்றையாயினும் பெற்றுப் புணர்வதாம்.

உ–ம்: வாழை + பழம் = வாழைப்பழம் **தோன்றல்**
மண்+குடம் = மட்குடம் திரிதல்
மரம்+வேர் = மரவேர் கெடுதல்
நிலம் + பனை = நிலப்பனை கெடுதல், தோன்றல்
பனை + காய் = பனங்காய் கெடுதல், தோன்றல், திரிதல்

தோன்றல், திரிதல் கெடுதல் என்னும் இவ்விகார மூன்றும், மயக்க விதி இன்மை பற்றியும், அல்வழி வேற்றுமைப் பொருணோக்கம் பற்றியும் வரும்"[4]

என்று புணர்ச்சியின் அடிப்படை விடயங்களை விளக்கிய நாவலர், மயங்கா எழுத்துக்கள், மெய்யீற்றின் முன் உயிர்புணர்தல், உயிரீற்றின் முன் உயிர் புணர்தல், குற்றியலுகரத்தின் முன் உயிரும் யகரமும் புணர்தல், சில முற்றியலுகரவீற்றின் முன் உயிரும் யகரமும் புணர்தல் எல்லாவீற்றின் முன்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல், மெய்யீற்றின் முன் யகரம் புணர்தல், மூன்று சுட்டின் முன்னும் எகர வினா முன்னும் நாற்கணமும் புணர்தல், உயர்திணைப்பெயர் பொதுப் பெயர்களின் முன் வல்லினம் புணர்தல், சிலவுயர்திணைப் பெயர்முன் நாற்கணமும் புணர்தல், விளிப் பெயர்முன் வல்லினம் புணர்தல், ஈற்றுவினா முன்னும் யாவினா முன்னும் வல்லினம் புணர்தல், வினைமுற்று வினைத்தொகைகளின் முன் வல்லினம் புணர்தல், பெயரெச்சத்தின் முன் வல்லினம் புணர்தல், வினையெச்சத்தின் முன் வல்லினம் புணர்தல், இஉஐ மொழிந்த உயிரீற்றஃறிணைப் பெயர் முன் வல்லினம் புணர்தல்,

முற்றியலுகர வீற்றுப்பெயர் முன் வல்லினம் புணர்தல், இ,ஐ,ய,ர,ழ வீற்றஃறிணைப் பெயர் முன் வல்லினம் புணர்தல், சில மரப் பெயர் முன் வல்லினம் புணர்தல், சில வேற்றுமையுருபின் முன் வல்லினம் புணர்தல், குற்றியலுகரவீறு, குற்றியலுகரவீற்றுத் திசைப் பெயர்களோடு திசைப் பெயர்களும் பிறபெயர்களும் புணர்தல், உகரவீற்றெண்ணுப் பெயர்ப் புணர்ச்சி மெய்யீற்று முதனிலைத் தொழிற்பெயர் முன்னும் ஏவல்வினை முன்னும் மெய்புணர்தல், ணகர னகர வீற்றுப் புணர்ச்சி, மகர வீற்றுப் புணர்ச்சி, லகர ளகர வீற்றுப் புணர்ச்சி, வகர வீற்றுப் புணர்ச்சி எண்ணுப் பெயர், நிறைப் பெயர் அளவுப் பெயர்கள் சாரியை பெறுதல், இடைச் சொற்களின் முன் வல்லினம் புணர்தல், உரிச்சொற்களின் முன் வல்லினம் புணர்தல், உருபு புணர்ச்சி, விதியில்லா விகாரங்கள் என்ற தலைப்புகளிற் புணர்ச்சியின் ஏனைய சகல விடயங்களையும் சுருக்கமாக ஆனால் தெளிவாக விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பழந்தமிழிலக்கண நூல்களெல்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட இயல்களை அமைத்துப் புணர்ச்சி யிலக்கணம் கூறியுள்ள போதிலும் ஒரே இயலில் நாவலர் அவற்றைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் தொகுத்துக் கூறியுள்ளார்.

வினையை நாவலர் செய்வினை, செயப்பாட்டுவினை என வகைப்படுத்திச் சொல்லியுள்ளார். இத்தன்மை பழந்தமிழிலக்கண நூல்களில் இல்லையென்றே கூறவேண்டும். தொல்காப்பியரும் பவணந்தியாரும் செயப்பாட்டு வினை பற்றிக் கூறவில்லை. **வீரசோழியம், இலக்கணக்கொத்து, பிரயோக விவேகம்** முதலான இலக்கண நூல்களிலும் இவை பற்றிய தெளிவான குறிப்புக்கள் இல்லையென்றே கூற வேண்டியுள்ளது. ஆனால் நாவலர், செய்வினை செயப்பாட்டு வினை என இரண்டாகப் பிரித்து வினையியலில்,

செய்வினையாவது, படுவிகுதி புணராத முதனிலை அடியாகத் தோன்றி எழுவாய்க் கருத்தாவைக் கொண்டுவரும் வினையாம்.

உ – ம் சாத்தனடந்தான் நடப்பித்தான்
சாத்தன் கட்டினான் கட்டுவித்தான்

செயப்பாட்டு வினையாவது படுவிகுதி புணர்ந்த முதனிலை அடியாகத் தோன்றி,

வினைமுதல் மூன்றாம் வேற்றுமையினும் செயப்படுபொருள் எழுவாயிலும் வரப்பெறும் வினையாம்.

பிறவினை முதனிலைகளும், செயப்படுபொருள் குன்றாத தன்வினை முதனிலைகளும் படுவிகுதியோடும், இடையே அகரச் சாரியையேனும் குச்சாரியையும் அகரச் சாரியையுமேனும், பெற்றுச் செயப்பாட்டுவினை முதனிலைகளாக வரும்

உ-ம் : சாத்தனா லிம்மாடு நடப்பிக்கப்பட்டது.

கொற்றனா லிச்சோறுண்ணப்பட்டது.

செயப்பாட்டுவினை, ஒரோவிடத்துப் படுவிகுதி தொக்கும் வரும்

உ - ம் : “ இல்வாழ்வானெனன்பான்”, இங்கே என்படுவான் என்னுஞ் செயப்பாட்டு வினை என்பான் எனப்படுவிகுதி தொக்கு நின்றது. உண்ட சோறு இங்கே உண்ணப்பட்ட என்னுஞ் செயப்பாட்டுவினை உண்ட எனப்படுவிகுதி தொக்கு நின்றது.[5]

எனக் கூறியுள்ளார். எனவே, நாவலர் பழந்தமிழ் இலக்கண நூல்களிலே தெளிவாகக் கூறப்படாத சில இலக்கண விடயங்களுக்குத் தெளிவாக விளக்கம் தந்துள்ளார் எனலாம்.

தொடர்மொழியதிகாரம் நாவலராலே புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதி. ஆனால் அங்கு கூறப்படும் செய்திகள் பழந்தமிழிலக்கண நூல்களிற் பயின்று காணப்படுவனவே. தொடர்மொழியதிகாரத்தைத் தொகைநிலைத் தொடரியல் , தொகாநிலைத் தொடரியல் ஒழிபியல் என்று மூன்றாக நாவலர் வகுத்துள்ளார்.

முதலாவதாகிய தொகைநிலைத் தொடரியலில், தொகைநிலைத் தொடர்ப்பாகு பாடு, வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித்தொகை, தொகைநிலைத் தொடர்மொழிகள் பலபொருள்படுதல், தொகைநிலைத்தொடர் மொழிகளிற் பொருள் சிறக்கும் இடங்கள் ஆகிய தலைப்புகளிலும்,

இரண்டாவதாகிய தொகாநிலைத் தொடரியலில், தொகாநிலைத்தொடர்ப் பாகுபாடு, எழுவாய்த் தொடர்க்கும் வினைமுற்றுத் தொடர்க்கும் வேற்றுமை, இடைப்பிறவரல், முடிக்குஞ் சொனிற்குமிடம் ஆகிய தலைப்புக்களிலும்,[6]

மூன்றாவதாகிய ஒழிபியலில்[6], தொடர்மொழிப்பாகுபாடு, வாக்கியப் பொருளுணர்வுக்குக் காரணம், உரும் வினையும் அடுக்கிமுடிதல், திணைபாலிட முடிபு, திணைபாலிடப் பொதுமை நீங்கு நெறி, உயர்திணை தொடர்ந்த அஃறிணை கலந்த திணைபால்களுக்கு ஒரு முடிவு, திணைபால் வழுவமைதி, ஒருமை பன்மை மயக்கம், இடவழுவமைதி, காலவழுவமைதி, வினை முதலல்லனவற்றை வினைமுதல் போலச் சொல்லல், அடைமொழி, சிறப்புப் பெயர் இயற்பெயர், வினாவிடை, சுட்டு, மரபு, முற்றும்மை, ஒருபொருட்பன்மொழி, அடுக்குச் சொல், சொல்லெச்சம், இசையெச்சம் ஆகிய தலைப்புக்களிலும் தொடரிலக்கணத்தை விளக்கியுள்ளார். இங்கு நாவலராற் கூறப்பட்ட செய்திகள் பழந்தமிழிலக்கண நூல்களில் ஆங்காங்கே காணப்பட்டவை தாம். இருப்பினும் நாவலர் அவற்றை ஒன்றாக்கித் 'தொடர் மொழியதிகாரம்' என்ற பெயரில் ஓரியலை அமைத்துத் தெளிவுடன் கூடிய – எளிமையான – விளக்கத்துடன் விடயங்களைக் கூறியுள்ளார்.

இலக்கணச் சுருக்கத்தின் இறுதியிற் பகுபதமுடிவு, சொல்லிலக்கணங் கூறுதல்,

சொற்றொடரிலக்கணங் கூறுதல் ஆகிய விடயங்களைச் சேர்த்துள்ளார். இவற்றுட் பகுபதமுடிவு நாவலரது **நன்னூற் காண்டிகையுரையிலும்** கூறப்பட்டுள்ள விடயங்களையே கொண்டமைந்தாலும் சில வேறுபாடுகள் உள்ளன. முக்கியமாக **நன்னூலிற் சூத்திரங்களின் துணைகொண்டு** இலக்கணங் கூறிய நாவலர் **இலக்கணச் சுருக்கத்தில்** அவ்வாறு செய்யாமல் சூத்திர விதிகள் காட்டுவதை விடுத்துத் தெளிவான வசன நடையில் விளக்கியுள்ளார். எடுத்துக் காட்டு வருமாறு:

நன்னூற் காண்டிகையுரை : "பொன்னன் என்னும் பொருட் பெயர்ப் பகுபதம், பொன் என்னும் பகுதியும் அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, "தனிக்குறின் முன்னொற் றுயிர்" என்னுஞ் சூத்திர விதியாற் பகுதியீற்று னகர மெய் இரட்டித்து "உடன் மேலுயிர் வந்து" என்னுஞ் சூத்திர விதியால் இரட்டித்த னகர மெய்யின் மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது."[7]

இதே விடயம் சூத்திரமேற்கோள்களின்றி ஆனால் தெளிவான நடையில் **இலக்கணச் சுருக்கத்திற்** பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.:–

பொன்னன் என்னும் பொருட் பெயர்ப் பகுபதம், பொன் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, பகுதியீற்று னகரமெய் இரட்டித்து, இரட்டித்த னகர மெய்யின் மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது.[8]

சொல்லிலக்கணங் கூறுதல் என்ற பகுதியும் சொற்றொடரிலக்கணங் கூறுதல் என்ற பகுதியும் **இலக்கணச் சுருக்கத்திலேயே** புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

**நன்னூற்** பதவியலிலே 146 ஆம் சூத்திரத்திலிருந்து 150 ஆம் சூத்திரம் வரை வடமொழியாக்கம் பற்றிக் கூறப்படுகின்றது. அவற்றிற்குத் தெளிவான காண்டிகையுரை வரைந்த நாவலர் தமது **இலக்கணச் சுருக்கத்தில்** வடமொழியாக்கம் பற்றிக் கூறாது விட்டதும் கவனிக்கத் தக்கது.

பழந்தமிழிலக்கணகாரரால் விதந்து கூறப்படும் சார்பெழுத்துப் பற்றித் தமது நூலில் நாவலர் கூறாது விட்டதும் கவனிக்கத்தக்கது.

இவ்வாறாக நாவலர், **இலக்கணச் சுருக்கத்தில், நன்னூற் காண்டிகையுரையிற்** சொல்லப்பட்ட விடயங்களுடன் தனது காலத்துக்கு ஒவ்வாதனவற்றை நீக்கியும் தனது காலத்துக்கு வேண்டியவற்றைச் சேர்த்தும் தொகுத்து 406 அங்கங்களிலே கூறுகின்றார். மாணவர்களுக்கு மொழிப்பயிற்சியும், இலக்கியப் பயிற்சியும் உண்டாக்கத்தக்க வகையிலே வரைவிலக்கணங்களும் உதாரணங் களும் அமைக்கப்பட்டிருப்பதும் இதன் சிறப்பம்சங் களுள் ஒன்றெனலாம்.

## அடிக்குறிப்புக்கள்

1. சின்னையா கலையரசி; "நாவலரது இலக்கண முயற்சிகள் – தாக்கமும் விளைவுகளும்" நாவலர் நூற்றாண்டு மலர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, கொழும்பு.ப. 274.
2. ஆறுமுகநாவலர்; (1957) இலக்கணச் சுருக்கம் 23ஆம் பதிப்பு, வித்தியாநுபாலன அச்சகம், சென்னை ப. I
3. மே.கு.நூ, பக். 5 –6
4. மே.கு.நூ, பக். 25 – 27
5. மே.கு.நூ, பக். 143 – 144
6. மே.கு.நூ, பக். 177 – 196
7. ஆறுமுகநாவலர்; (1966) நன்னூல் காண்டிகையுரை 24ஆம் பதிப்பு, வித்தியாநுபாலன அச்சகம், சென்னை. ப.504
8. ஆறுமுகநாவலர்; (1957) இலக்கணச் சுருக்கம். ப. 197